**அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியம் - 2013**

அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1995 இன் 35 ஆம் இலக்க அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 35(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியத்தால் 2014 ஆம் ஆண்டிற்கு உரித்தாக உறப்பட்ட ரூபா 248,888 தொகையான செலவினம், மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மூலதனச் செலவினமாக வகைப்படுத்தப்பட வேண்டிய ரூபா 64,500 தொகையான செலவினம் மீண்டெழும் செலவினமாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) வரிசை அமைச்சினாலும் வேறோர் அமைச்சினாலும் நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த இரு மோட்டார் வாகனங்கள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலவிடப்பட்டிருந்த ரூபா 4,188,209 தொகையான செலவினம், தவறாக தீர்க்கப்படாத முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. ஆகையால் ஆண்டின் மிகை மற்றும் செயற்பாட்டு மூலதன நிலை அப் பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 பெறவேண்டிய கணக்குகள்

2008 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 127,343 தொகையான முற்பணம் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | |
| (i) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2:11 ஆம் உப பிரிவு | நிதியத்தின் வாகனங்களின் நுகரப்பட்ட எரிபொருளின் அளவு ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதில் கடமையாற்றும் காலம் 3 மாதங்கள் உச்ச அளவிற்கு உட்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2009 மே 05 ஆந் திகதி இருந்த பணிப்பாளர் இளைப்பாறியதன் பின்னர் அன்றைய நாள் முதல் 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் அவ் வெற்றிடம் நிரப்பப்படாது பதில் கடமை அடிப்படையில் ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு உத்தியோகபூர்வ கடை மேவுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீ/எப்/437 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபம் | நிதியத்திற்கு உரித்தாகும் வகையில் குறித்த காப்புறுதி மேவுகை பெறப்பட வேண்டியதாக இருந்த போதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 (அ) ஆம் பிரிவு | நிதியத்தின் வருடாந்த பாதீடு 2012 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் கௌரவ அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 371(ஆ) | 04 உத்தியோகத்தர்களுக்கு ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 20,000 படியான எல்லையை மிகைத்து ரூபா 157,843 தொகையான குறித்த பணிக்கான உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 103,299,406 மிகையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 82,999,417 ஆக இருந்தது. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 20,299,989 அதிகரிப்பாக இருந்தது. முத்திரையிடற் கட்டணம் மற்றும் திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அதிகரித்தமை இச் சாதகமான நிதி விளைவிற்குக் காரணமாகியிருந்தது.

**3.2 விபரமான நிதி மீளாய்வு**

| வருமானம்/ செலவினம் | வருமானம்/ செலவினம் | | வருமானம் மற்றும் செலவின மாற்றம் சாதகம்/ (பாதகம்) | வேறுபாடு சதவீதமாக |
| --- | --- | --- | --- | --- |
| | 2013 ரூபா | 2012 ரூபா | ரூபா | |
| முத்திரையிடப்படுவதனால் பெறப்பட்ட வருமானம் | 101,873,355 | 91,486,826 | 10,386,529 | 11 |
| வட்டி வருமானம் | 39,028,295 | 32,816,434 | 6,211,861 | 19 |
| முத்திரையிடல் அல்லாத வருமானம் | 98,727 | 779,960 | (681,233) | (87) |
| பதவியணி கிரயம் | 10,589,825 | 13,206,909 | 2,617,084 | 20 |
| பெறுமானத்தேய்வு | 6,829,057 | 7,584,605 | 755,548 | 10 |
| நிலைய, நிர்வாகச் செலவினம் | 16,530,142 | 13,178,376 | (3,351,766) | (25) |
| பங்களிப்பு மற்றும் அங்கத்துவக் கட்டணம் | 2,497,998 | 5,758,618 | 3,260,620 | 57 |
| ஏனைய செலவினங்கள் | 1,549,457 | 2,649,398 | 1,099,941 | 42 |

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 இன் 35 ஆம் இலக்க அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20(i)(அ) மற்றும் 37 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வியாபாரத்தில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து அளவை உபகரணங்களையும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு அனைத்து உபகரணங்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறையான ஒரு நடைமுறை நிதியத்திடம் காணப்படவில்லை.

(ஆ) மாவட்ட உத்தியோகத்தர்களால் மெய்மையாய்வு செய்யப்பட்ட அலகுகள் மற்றும் அது தொடர்பாக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பான விபரம் அந்த உத்தியோகத்தர்களால் நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அறவிடப்பட்ட கட்டணத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பணத்தைச் செலவு வைத்தல் மற்றும் மாதாந்த மெய்மையாய்வுக் கட்டணம் மற்றும் அலகின் அளவு தொடர்பாக மெய்மையாய்வு அறிக்கையில் (எம்எஸ்/4 அறிக்கை) காணப்படுகின்ற வருமானத்தின் பெறுமதி, மெய்மையாய்வு அறிக்கையின் பிரதிகளுடன் இணக்கமோ அல்லது கண்காணிப்பு மேற்கொள்ளப்படக்கூடிய வகையில் நிதியத்தால் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் தாபிக்கப்பட்டிராமையால் அதன் அளவீட்டு அலகு முத்திரையிடப்படுவதன் மூலம் பெறப்பட்ட வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்திகொள்ள முடியாதிருந்தது.

### 4.2 நிலையான சொத்துக் கட்டுப்பாடு

ரூபா 359,328,254 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களுக்குரித்தான அவற்றின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கு போதியளவில் நிலையான சொத்துப் பதிவேடு, உரித்துறுதி இன்மையால் நிலையான சொத்துக் கட்டுப்பாடு நலிவான நிலையில் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிராத போதிலும் மீளாய்வாண்டிற்காக ஒரு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் அது வருடாந்த பாதீட்டிற்கு இணையாக தயாரிக்கப்பட்டிராமையால் செயல் நடவடிக்கை விடயங்களை செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் ஒப்பிட முடியாதிருந்தது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

வரிசை அமைச்சிற்குரிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் நிதியம் கணக்காய்வு செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அத்தகைய கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் ஓர் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான செலவினங்கள்

1995 இன் 35 ஆம் இலக்க அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகளற்ற போதிலும் உதவிப் பணிப்பாளருக்கு கடன் தொகை மற்றும் நிதி மானியமாக ரூபா 1,783,358 தொகை கல்வி நடவடிக்கைகளுக்காக நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உள்ளபடியான தொகைக்குமிடையே கருத்திற்கொள்ளப்படக் கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு, ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. பதவியணியினர்

நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 325 ஆன போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் 192 இற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சிரேஷ்ட நிலையில் 04 வெற்றிடங்களும் மூன்றாம் நிலையில் 28 வெற்றிடங்களை 133 வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் நிதியத்தின் செயலாற்றல் போதியளவில் மேற்கொள்ளப்படுவதற்கு தடைகள் இருக்கவில்லை என்பது கணக்காய்வில் தவிர்க்க முடியாதிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது திணைக்களத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) கணக்கீடு
(இ) வருமானச் செலவினக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்களின் நிர்வாகம்
(உ) உள்ளகக் கணக்காய்வு
(ஊ) பதவியணியினர்